## வேளாண் வணிகத் திருவிழா 2023

# ஏற்றுமதியில் சிறந்து விளங்கிய விவசாயிகளுக்கு விருதுகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜூலை 9-

**வேளாண் வணிகத் திருவிழா 2023யை தொடங்கி வைத்து, விழா கண்காட்சி அரங்குகளை திறந்து வைத்து, உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதியில் சிறந்து விளங்கிய விவசாயிகளுக்கு விருதுகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.7.2023) சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் வேளாண் வணிகத் திருவிழா 2023யை தொடங்கி வைத்து, உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் கண்காட்சி அரங்குகளை திறந்து வைத்து, வர்த்தகத்தில் சிறந்து விளங்கும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதியில் சிறந்து விளங்கும் விவசாயிகளுக்கு விருதுகள் வழங்கினார்.

விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல்வேறு நலத்திட்டங்களை இவ்வரசு ஆட்சிப்பொறுப்பேற்றது முதல் அறிவித்து வெற்றிகரமாக செயல்படுத்தி வருகின்றது. மாநிலத்தின் பொருளாதாரம் வளரும்போது விவசாயிகளின் வாழ்வும் அதே அளவு வளர்ந்து செழிக்க வேண்டும் என்பதே அரசின் குறிக்கோள்.

### அடித்தளமாக அமைந்து வருகின்றன!

2023-24ஆம் ஆண்டிற்கான வேளாண்மை உழவர் நலத்துறையின் மானியக் கோரிக்கையில், மாநில அளவில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கான (Farmer Producer Organisation) கண்காட்சி சென்னையில் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் என்பவை வேளாண் தொழிலை அதன் அடுத்தக்கட்ட வளர்ச்சிக்கும், விவசாய மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை வணிகப்படுத்துதலுக்கும் அடித்தளமாக அமைந்து வருகின்றன.

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் வணிக ரீதியாக இலாபகரமாக இயங்குவதற்கு, தமிழ்நாடு அரசு பயிற்சியும், நிதிஉதவியும் வழங்கி வருகிறது. அதன் ஒரு பகுதியாக, வேளாண் வணிகத் திருவிழா 2023 சென்னை வர்த்தக மையத்தில் நேற்று (08.07.2023) முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. தொடர்ந்து, உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, பார்வையிட்டார்.

### கண்காட்சி அரங்குகளின் விவரங்கள்!

இவ்வேளாண் வணிகத் திருவிழாவில் 176 கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில், 86 அரங்குகளில் 188 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் விளைபொருட்களும், 90 அரங்குகளில் வேளாண்மை சார்ந்த பல்வேறு துறைகள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA), நபார்டு வங்கி (NABARD), தொழில் முனைவோர்கள், பிற மாநிலங்களில் உள்ள உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், ஏற்றுமதியாளர்கள், வங்கிகள் போன்ற பல்வேறு அமைப்புகள் சார்ந்த கண்காட்சிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வரங்குகளில் சிறுதானியங்கள், பாரம்பரிய அரிசி வகைகள், பயறு வகைகள், எண்ணெய்வித்துக்கள், பனை சார்ந்த பொருட்கள், நறுமணப் பொருட்கள், காய்கறிகள், பழங்கள், பூக்கள், சிறுதானியங்களில் மதிப்புக்கூட்டப்பட்ட தின்பண்டங்கள், உடனடியாக சமைக்கும் உணவுப் பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு முக்கிய விளைபொருட்கள் பொதுமக்களின் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

### உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு விருதுகள்!

இவ்விழாவில் முதலமைச்சர் அவர்களால் "ஆளுமையில் சிறந்த உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கான விருதினை" புதுக்கோட்டை இயற்கை விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கும், ஈரோடு கழனி உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கும், "வர்த்தகத்தில் சிறந்த உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கான விருது" கடலூர் மாவட்டம், மங்களூர் தானியப் பயிர்கள் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கும், சேலம் வீரபாண்டி களஞ்சிய ஜீவிதம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கும், தூத்துக்குடி பயறு உற்பத்தியாளர் நிறுவனத்திற்கும் வழங்கப்பட்டது.

தொடர்ந்து, 2022-23ஆம் ஆண்டில் வேளாண் ஏற்றுமதியில் சிறந்து விளங்கும் கடலூர் மாவட்டம், பண்ருட்டியை சேர்ந்த விவசாயி ம.இராமகிருஷ்ணன் அவர்களுக்கு விருதும், இரண்டு இலட்சம் ரூபாய்க்கான பரிசுத் தொகையும் வழங்கப்பட்டது.

### முக்கிய தலைப்புகளில் கருத்தரங்குகள்!

விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த வணிகம் குறித்த விழிப்புணர்வையும் தொழில் வாய்ப்புகள் குறித்தும் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் தகவல்களை பெறுவதற்காக துறை சார்ந்த வல்லுநர்களைக் கொண்டு கருத்தரங்கங்கள் இன்றும் நாளையும் நடைபெற உள்ளன.

வேளாண் வணிகத் திருவிழாவில் இன்றையதினம் மாலை, உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களை திறமையான முறையில் நிர்வகித்தல், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கான நிதிஉதவித் திட்டங்கள் தொடர்பான கருத்தரங்குகளில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனப் பிரதிநிதிகள் கலந்து கொண்டு பயனடைய உள்ளனர்.

அதைத் தொடர்ந்து இன்று (9.07.2023) அறுவடைக்குப் பின் மேலாண்மை மற்றும் மதிப்புக்கூட்டுதல், ஏற்றுமதிக்கான சந்தை வாய்ப்புகள், வெற்றிபெற்ற உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் கடந்து வந்த பாதை, டிஜிட்டல் மார்க்கெட்டிங் மற்றும் சந்தை வாய்ப்புகள் குறித்த கருத்தரங்குகளும், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களில் பொருட்களின் விற்பனையினை எளிதாக்கும் வகையில், வாங்குபவர்விற்பனையாளர் சந்திப்பும் (BuyersSellers Meet) நடைபெற உள்ளது. இவ்வேளாண் வணிகத் திருவிழாவில் சுமார் 5,000க்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டு பயனடைவர்.

இவ்விழாவில், வேண்மை உழவர் நலத்துறை அமைச்சர்

எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், சட்டத் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம், சர்க்கரைத் துறை ஆணையர் சி.விஜயராஜ் குமார், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் சி. சமயமூர்த்தி, வேளாண்மை - உழவர் நலத்துறை சிறப்புச் செயலாளர் டாக்டர் ஆர். நந்தகோபால், வேளாண்மை ஆணையர் டாக்டர்எல்.சுப்பிரமணியன், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை இயக்குநர் முனைவர் ச. நடராஜன், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் ஆர். பிருந்தா தேவி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.7.2023) சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் வேளாண் வணிகத் திருவிழா 2023யை தொடங்கி வைத்து, உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் கண்காட்சி அரங்குகளை திறந்து வைத்து பார்வையிட்டார். உடன் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சர்க்கரைத் துறை ஆணையர் சி.விஜயராஜ்குமார், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் சி.சமயமூர்த்தி, வேளாண்மை உழவர் நலத்துறை சிறப்புச் செயலாளர் டாக்டர் ஆர். நந்தகோபால் வேளாண்மை ஆணையர் டாக்டர் எல்.சுப்பிரமணியன் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர் முனைவர் ச.நடராஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## பருத்திக்கான காரீப் குறைந்தபட்ச ஆதரவு விலையை ஜூன் 1 முதல் நடைமுறைப்படுத்த வேண்டும்!

# தமிழ்நாட்டில் பருத்தி கொள்முதலை உடனடியாகத் தொடங்கிடுக!

## பிரதமருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

சென்னை, ஜூன் 9-

தமிழ்நாட்டில் பருத்தி கொள்முதலை உடனடியாகத் தொடங்கிடவும், பருத்திக்கான காரீப் குறைந்தபட்ச ஆதரவு விலையை ஜூன் 1 முதல் நடைமுறைக்குக் கொண்டுவரவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.

தமிழ்நாட்டில் பருத்தி கொள்முதலைத் தொடங்கிடவும், பருத்திக்கான காரீப் குறைந்தபட்ச ஆதரவு விலையை ஜூன் 1 முதல் நடைமுறைக்குக் கொண்டுவரக் கோரியும், பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7-7-2023) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், நடப்பு அறுவடைப் பருவத்தில், பருத்தியின் விலை கடும் வீழ்ச்சியடைந்துள்ள சூழ்நிலையில், தமிழ்நாட்டில் பருத்தி விவசாயிகள் எதிர்கொண்டுள்ள மோசமான நிலை குறித்து பிரதமர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதாக முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு பருத்தி விவசாயிகள், குவிண்டால் ஒன்றுக்கு 12,000 ரூபாய் என்ற வீதத்தில் தாங்கள் விளைவித்த பருத்தியை விற்பனை செய்து அதிக இலாபம் ஈட்ட முடிந்தது என்றும், அதனால் உற்சாகமடைந்த பெரும்பாலான விவசாயிகள், இந்த ஆண்டும் பருத்தி சாகுபடியைத் தேர்வு செய்தனர் என்றும் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், தற்போது பருத்தியின் விலை, குவிண்டால் ஒன்றுக்கு 5,500 ரூபாய் எனக் கடுமையாக சரிந்துள்ளதால், விவசாயிகள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

வேளாண் விளைபொருட்களின் சந்தை விலையை நிலைப்படுத்துவதில், ஒன்றிய அரசின் குறைந்தபட்ச ஆதரவு விலை முக்கியப் பங்கு வகிப்பதாகவும், தமிழ்நாட்டில் கடந்த சில ஆண்டுகளாக இந்திய பருத்திக் கழகத்தின் குறைந்தபட்ச ஆதரவு விலை கொள்முதல் நடவடிக்கைகள் பருத்தி விலையை நிலைப்படுத்துவதற்கு பெரிதும் உதவியாக இருந்து வந்ததாகவும் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், ஒன்றிய அரசு 2023-2024 ஆம் ஆண்டிற்கான குறைந்தபட்ச ஆதரவு விலையாக நடுத்தர இழை பருத்திக்கு குவிண்டால் ஒன்றுக்கு 6,620/ரூபாய் எனவும், நீண்ட இழை பருத்திக்கு குவிண்டால் ஒன்றுக்கு 7,020/ எனவும் நிர்ணயித்துள்ளதை தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்நாட்டில் பருத்தி சாகுபடிக்கு நஞ்சைத் தரிசு, கோடை இறவை, என இரண்டு தனித்துவமான பருவங்கள் உள்ளன என்றும், அதன்படி பிப்ரவரி-மார்ச் மாதங்களில் விதைப்பு செய்யப்பட்டு, ஜூன் முதல் வாரத்தில் இருந்து பருத்தி அறுவடை செய்யப்படுகிறது என்றும், இந்த இரண்டு பருவங்களிலும் சுமார் 84,000 ஏக்கரில் பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது என்றும் முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது நஞ்சைத் தரிசுப் பருத்தி அறுவடை முழு வீச்சில் நடைபெற்று வரும் நிலையில், தமிழ்நாட்டிலுள்ள பருத்தி விவசாயிகள், பருத்தி விலை குவிண்டால் ஒன்றுக்கு 5,500 ரூபாயாகக் குறைந்துள்ளதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் பருத்திக் கொள்முதல் நடவடிக்கைகளை இந்திய பருத்திக் கழகம் உடனடியாகத் தொடங்கிட வேண்டுமென்றும், பருத்திக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை இனி ஜூன் 1-ஆம் தேதியில் இருந்து அமல்படுத்தக் கேட்டுக்கொண்டுள்ள தாகவும் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு குறுவை நெல் பருவம் ஒரு மாதம் முன்னதாகவே தொடங்கிய போது நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை ஒரு மாதம் முன்னதாகவே நடைமுறைப்படுத்தி அளித்த ஆதரவை நன்றியுடன் இத்தருணத்தில் நினைவுகூர்வதாகத் தெரிவித்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டில் பருத்தி கொள்முதலை உடனடியாகத் தொடங்கிட இந்திய பருத்திக் கழகத்திற்கு உத்தரவிடுமாறும், பருத்திக்கான காரீப் குறைந்தபட்ச ஆதரவு விலையை இனி வருங்காலங்களில் ஜூன் 1 முதல் நடைமுறைக்குக் கொண்டுவர வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகத்திற்கு உத்தரவிடுமாறும் பிரதமர் நரேந்திர மோடி அவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

பருத்தி விலையினை நிலைப்படுத்துவதன் மூலமும், விவசாயிகளுக்கு அவர்கள் விளைவித்த விளைபொருட்களுக்கு நியாயமான வருமானத்தை உறுதி செய்வதன் மூலமும், மாநிலத்தில் பாதிக்கப்பட்டுள்ள பருத்தி விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் கிடைக்கும் என்றும் தனது கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அமைச்சர் துரைமுருகன் - டி.ஆர்.பாலு எம்.பி. முன்னிலை! திராவிட இயக்க எழுத்தாளர்

# க.திருநாவுக்கரசு புதல்வர் தி.சிற்றரசு - த.எழிலரசி மணவிழா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று நடைபெறுகிறது!

*சென்னை, ஜூலை 9-*

*திராவிட இயக்க எழுத்தாளர் க.திருநாவுக்கரசு - தி.கோடீசுவரி ஆகியோரின் புதல்வர் தி. சிற்றரசுக்கும் - நினைவில் வாழும் தொழிற்சங்கத் தலைவர் வி.எம்.ஆர்.சபாபதி - சாவித்திரி அம்மாள் ஆகியோரின் பெயர்த்தியும், நினைவில் வாழும் சி.தயாமூர்த்தி - இராணி ஆகியோரின் புதல்வியுமான த.எழிலரசிக்கும் மணவிழா இன்று (9.7.2023 - ஞாயிறு) காலை 9.30 மணியளவில் சென்னை - அண்ணா அறிவாலயம் - கலைஞர் அரங்கில் நடைபெறுகிறது.*



*மணவிழாவில் மு.சண்முகம் எம்.பி. வரவேற்புரையாற்றுகிறார்.*

*டி.கே.எஸ்.இளங்கோவன் தொகுப்புரை வழங்குகிறார்.*

*இம்மணவிழாவை கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.*

*கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*இம்மணவிழாவில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, வைகோ எம்.பி., ஆ.இராசா எம்.பி., கனிமொழி கருணாநிதி எம்.பி., ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் எ.வ.வேலு, மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன், சுப. வீரபாண்டியன், நக்கீரன் கோபால், விஜயா தாயன்பன், கி.நடராசன், நே.சிற்றரசு உள்ளிட்ட கழக முன்னணியினர், கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு மணமக்களை வாழத்துகின்றனர்.*

*திராவிட இயக்க எழுத்தாளர் க.திருநாவுக்கரசு நன்றி கூறுகிறார்.*

*இம்மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி இன்று (9.7.2023 - ஞாயிறு) மாலை 6.30 மணியளவில் திரைப்பட இசையமைப்பாளர் கலைமாமணி தாயன்பன் வழங்கும் பல்லவி குழுவினரின் மெல்லிசையுடன் நடைபெறுகிறது.*

## முரசொலி விளம்பரப் பிரிவில் பணிபுரியும்

# டி.தீபக் - பி.ராஜபிரியா திருமண வரவேற்பு விழா!

## கழகத்தினர் - குடும்பத்தினர் வாழ்த்துகின்றனர்!

*திருவள்ளூர், ஜூலை 9-*

*முரசொலி விளம்பரப் பிரிவில் பணிபுரியும் டி.தீபக் - பி.ராஜபிரியா ஆகியோரின் திருமணம் மற்றும் திருமண வரவேற்பு விழா, இன்று (9.7.2023) திருவள்ளூரில் நடைபெறுகிறது.*

*இம்மண விழா பற்றிய விவரம் வருமாறு:-*



*திருவள்ளூர் மாவட்டம், பூங்கந்தூர் கிராமம், (நினைவில் வாழும்) ஜி.பாபு - பி.சரோஜா அம்மாள் ஆகியோரின் பேரனும், பி. தேவராஜ் - டி.ராதா ஆகியோரின் புதல்வரும், முரசொலி விளம்பரப் பிரிவில் பணிபுரிபவருமான டி.தீபக்கிற்கும் திருவள்ளூர் மாவட்டம் - திருத்தணி வட்டம் - முத்துக்கொண்டா புரம் கிராமம் (நினைவில் வாழும்) ஆர்.விஸ்வநாதன் - வி.முருகம்மாள் ஆகியோரின் பேத்தியும், வி.பழநி - பி.நைனியம்மாள் ஆகியோரின் புதல்வியுமான பி.ராஜபிரியாவிற்கும் திருமணம் இன்று (9.7.2023 - ஞாயிற்றுக்கிழமை) காலை 6 மணி அளவில், திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் நடைபெறுகிறது.*

*அதனைத் தொடர்ந்து, திருமண வரவேற்பு விழா, இன்று மாலை 6 மணி அளவில் திருவள்ளூர், காக்களூர் பைபாஸ் சாலையில் அமைந்துள்ள தனமணிராஜ் மஹாலில் நடைபெறுகிறது.*

*மணவிழாவிலும் - மணவிழா வரவேற்பிலும் கழக நிர்வாகிகள், குடும்பத்தினர், நண்பர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.*

*பி.பூபதி - பி.சங்கரி, பி.சரவணன் - எஸ்.லட்சுமி ஆகியோர் அனைவரையும் வரவேற்கின்றனர்.*

## குற்றாலம் அருவிகளில்

# குளிக்க அனுமதி

*தென்காசி, ஜூலை 9-*

*தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் தற்போது சீசன் களை கட்டி உள்ளது. இங்குள்ள மெயின் அருவி, ஐந்தருவி, பழைய குற்றாலம் அருவி, புலிஅருவி ஆகிய அனைத்து அருவிகளிலும் தண்ணீர் கொட்டுகிறது. இரு தினங்களுக்கு முன் மெயின் அருவி, ஐந்தருவி ஆகிய அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் சுற்றுலா பயணிகள் குளிக்க போலீசார் தடை விதித்தனர். இதனால் சுற்றுலா பயணிகள் மிகுந்த ஏமாற்றம் அடைந்தனர்.*

*இந்நிலையில் குற்றால அருவிகளில் வெள்ளப்பெருக்கு குறைந்ததை அடுத்து அருவிகளில் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதனால் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.*


